# தவணைப் பரீட்சை, யூன் - 2016
# Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | கிறிஸ்தவம் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ சரியான விடையினைத் தெரிவு செய்து புள்ளடி இடுக.

1. திருவிவிலியம் பல நூல்களை உள்ளடக்கியிருப்பினும் அது ஒரு நூலாகக் கருதப்படக் காரணம்
   1. அதன் நோக்கம் ஒன்றே
   2. அதன் கருப்பொருள் ஒன்றேயாகும்
   3. அதன் ஆசிரியர் ஒருவரே
   4. அது எழுதப்பட்ட காலம் ஒன்றாகும்
   5. அதன் இலக்கிய நடை ஒன்றே

2. ஐந்நூலின் முக்கிய கருத்துக்களுள் பொருத்தமற்றது
   1. குலமுதுவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி
   2. எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்டல்
   3. பாலைவனத்தில் இறைபராமரிப்பு
   4. சீனாய் உடன்படிக்கை
   5. இறைவாக்கினர்களின் அறிவுரைகள்

3. பழமை வாய்ந்த நூலாகத் திருவிவிலியம் அறிமுகம் செய்யப்படுவதற்கான காரணம். அதில் உள்ளடக்கப்பட்டுள்ள
   1. கீழைத்தேய இலக்கிய அம்சமாகும்
   2. கீழைத்தேயங்களுக்குரிய விடயமாகும்
   3. பழைய மொழிகளின் கருத்துக்களும் காட்சிகளுமாகும்
   4. வரலாற்றுக் கதைகளும் காட்சிகளுமாகும்
   5. அரசியல் செய்திகளாகும்

4. A : தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட மனிதர்கள் கடவுள் அருளியதை உரைத்ததே இறைவாக்கு (லூ. 12:12)

   B : நான் உனக்குச் சொல்லியிருக்கும் சொற்களை எல்லாம் ஏட்டுச் சுருளில் எழுதிவை (எரே. 30:2)

   இவ் இறைவார்த்தைகள் குறிப்பது
   1. மேய்ப்பு இறைஏவுதலும் வாய்மொழி இறைஏவுதலும்
   2. வாய்மொழி இறைஏவுதலும் செயலூக்கமுள்ள இறைஏவுதலும்
   3. வாய்மொழி இறைஏவுதலும், எழுதும் இறைஏவுதலும்
   4. எழுதும் இறைஏவுதலும், மேய்ப்பு இறைஏவுதலும்
   5. வாய்மொழி இறைஏவுதலும், அப்போஸ்தல இறைஏவுதலும்

5. விடுதலைப் பயணத்தின் பின் கானான் தேசத்தில் ஆட்சி செய்த தலைவர்கள்
   1. நீதிபதிகள்
   2. குலமுதுவர்கள்
   3. ஆளுனர்கள்
   4. தலைமைக்குருக்கள்
   5. பரிசேயர்கள்

6. இயேசுவின் உன்னதசெபம் - இயேசு கற்பித்த செபம் ஆகிய இரண்டிலும் காணப்படும் ஒத்த சிறப்புத் தன்மையாவது
   1. அனுதின உணவிற்காக செபித்தல்
   2. நாட்டின் சமாதானத்திற்காக செபித்தல்
   3. திருச்சபையின் ஒற்றுமைக்காக செபித்தல்
   4. தீயோனின் சக்திகளிலிருந்து மீட்கும்படி செபித்தல்
   5. தன்னைச் சார்ந்தோருக்காக செபித்தல்

7. இயேசு புதுமைகள் செய்தது
   1. உரோமையரிடமிருந்து இஸ்ரயேலரை மீட்க
   2. புறவினத்தாரைத் திருச்சபையில் சேர்க்க
   3. இறையரசை வெளிப்படுத்த
   4. இஸ்ரயேலருக்கு தன் வலிமையைக் காட்ட
   5. தான் மெசியா என்பதை உணர்த்த

8. இம்மானுவேல் என்னும் இறைவாக்கை அளித்தவர்
   1. செக்கரியா 2. எசாயா 3. ஆமோஸ்
   4. யோவேல் 5. திருமுழுக்கு யோவான்

9. உயிர்த்த இயேசுவின் தரிசனங்களுள் ஒன்றான தோமாவுக்குத் தோன்றுதல் மூலம் வெளிப்படுத்தப்படுவது
   1. ஆரம்ப சீடர்களுக்குள் இருந்த நம்பிக்கை எதிர்கால கிறிஸ்தவர்களுக்குள்ளும் இருக்கவேண்டும்
   2. உயிர்ப்பு என்பது மரணத்திலிருந்து இறைவன் எம்மை விடுவித்தல் என்பது
   3. நம்பிக்கையற்றவர்கள் தோமாவைப் போல காட்சியருளப்படுவார்கள்
   4. கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை தோமாவின் நம்பிக்கை என்பதாகும்
   5. அச்சம் தவிர்த்து இறைவனில் நம்பிக்கை கொள்ள வேண்டும்

10. என் தாகத்திற்கு காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள் என்னும் மறைநூல் வாக்கு காணப்படுவது
   1. திருத்தூதர்பணியில்
   2. திருமடல்களில்
   3. திருச்சபையின் ஏடுகளில்
   4. திருத்தூதர்களின் மரபில்
   5. திருப்பாடலில்

11. மோரியா மலையுடன் தொடர்புடைய நிகழ்வு
   1. உடன்படிக்கை
   2. ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிடல்
   3. தண்ணீர் சுரத்தல்
   4. மோசேயின் அழைப்பு
   5. ஈசாக்குடன் உடன்படிக்கையைப் புதுப்பித்தல்

12. “நான் கடவுளின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப் பிழைத்தேன்” இக் கூற்றோடு தொர்புடைய சம்பவம்
   1. ஆபிரகாம் இறைவனோடு உடன்படிக்கை செய்த போது
   2. ஈசாக்குடன் இறைவன் உடன்படிக்கையைப் புதுப்பித்த போது
   3. யாக்கோபு கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி பெற்ற போது
   4. லூசு என்னுமிடத்தில் யாக்கோபு இறைவனைக் கண்ட போது
   5. மோசே இறைவனால் அழைக்கப்பட்ட போது

13. “பாலைவனத்தில் செத்தொழிவதை விட எகிப்தியருக்கு ஊழியம் செய்வதே எங்களுக்கு நலம்” என இஸ்ரயேல் மக்கள் கூறியது
   1. அமலேக்கியர் தாக்கிய போது
   2. பசியேற்பட்டபோது
   3. தாகமேற்பட்டபோது
   4. பாம்புகளால் கடியுண்ட போது
   5. எகிப்தியப் படைகளால் துரத்தியடிக்கப்பட்டபோது

14. நாடுகடத்தப்பட்டோரின் முதலாவது இறைவாக்கினர்
   1. எசாயா 2. எரேமியா 3. எசெக்கியேல் 4. மீக்கா 5. ஆமோஸ்

15. கிரேக்கமொழியில் கிறிஸ்தொஸ் குறிக்கும் எபிரேய மூலம்
1. பெரித் 2. ஹொசே 3. மன்னீஸ் 4. றோ ஏ 5. மஷியா

16. இறைவனோடு ஏற்பட்ட உரையாடலின் மூலமாக இறை அழைப்புப் பெற்றவர்
1. எசாயா 2. எரேமியா 3. எசெக்கியேல் 4. மீக்கா 5. ஆமோஸ்

17. வடஅரசு அடிமையாகியது
1. அசீரியாவிற்கு 2. பபிலோனியாவிற்கு 3. கிரேக்கத்திற்கு
4. பாரசீகத்திற்கு 5. உரோமைக்கு

18. மேன்மையான இறைவனை ஆயனாகவும், இஸ்ரயேல் மக்களை அவரது மந்தைகளாகவும் எடுத்துக் காட்டிய இறைவாக்கினர்
1. எசாயா 2. ஒசேயா 3. தானியேல் 4. ஆமோஸ் 5. எரேமியா

19. கூற்று : பெயர்செபா இஸ்ரயேல் மக்களின் புனித இடமாக ஆரம்பமானது
காரணம் : ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கை ஈசாக்கு மூலம் புதுப்பிக்கப்பட்டது
1. கூற்று சரி, காரணம் சரி
2. கூற்று பிழை, காரணம் பிழை
3. கூற்றுக்கும் காரணத்திற்கும் தொடர்பில்லை
4. கூற்று சரி, காரணம் பிழை
5. கூற்று பிழை, காரணம் சரி

20. பலஸ்தீனர் வரியினைச் சுமத்த வேண்டியிருந்தது
1. எகிப்தியருக்கு 2. அசீரியருக்கு 3. உரோமையருக்கு
4. பபிலோனியருக்கு 5. கிரேக்கருக்கு

21. சிலுவையில் அறைவதற்கு தீர்ப்பிடும் அதிகாரம் இருந்தது
1. தலைமைக்குருக்களுக்கு மட்டும்
2. தலைமைச் சங்கத்திற்கு மட்டும்
3. கிரேக்கருக்கு மட்டும்
4. உரோமைப் பேரரசுக்கு மட்டும்
5. பரிசேயருக்கு மட்டும்

22. பலஸ்தீன மக்கள் மீது சுமத்தப்பட்ட இரண்டு வரிகள்
1. மேய்ப்பு வரி, நிலவரி
2. ஆலயவரி, அடிமைவரி
3. உரோமைப் பேரரசுக்கான வரி, ஆலய வரி
4. உரோமைய வரி, அடிமை வரி
5. அடிமைவரி, நிலவரி

23. நல்லதொரு வாழ்க்கை முறைக்கு நம்மை ஈடுபடுத்தும் உவமையாக அமைவது
1. வலை
2. புதையல்
3. முத்து
4. திருமணவிருந்து
5. தானாக முளைக்கும் விதை

24. புனித பவுல் கணவனுக்கும் மனைவிக்குமிடையேயுள்ள உறவு கிறிஸ்துவிற்கும் திருச்சபைக்கும் இடையேயுள்ள உறவிற்கு ஒப்பிட்டுக் கூறுவது
1. கலாத்தியரில் 2. 1கொரிந்தியரில் 3. 11கொரிந்தியரில்
4. உரோமையரில் 5. எபேசியரில்

25. அம்புறோஸ், ஜெரோம், அகஸ்டின், கிளரி ஆகியோரைத் திருச்சபையின் பெரிய தந்தையர்கள் என உத்தியோக பூர்வமாக முதன் முதலாகப் பெயரிட்டவர்
   1. திருத்தந்தை 12ம் பத்திநாதர்
   2. திருத்தந்தை 6ம் பவுல்
   3. திருத்தந்தை 8ஆவது பொனிபாஸ்
   4. திருத்தந்தை 13ஆவது சிங்கராஜர்
   5. திருத்தந்தை 10 ஆம் பத்திநாதர்

26. "அட்டில்லா" என்னும் ஏழு கோத்திரத் தலைவனின் தாக்கங்களிலிருந்து உரோமையைப் பாதுகாத்துக் கொண்டவர்
   1. திருத்தந்தை 23ஆம் அருளப்பர்
   2. திருத்தந்தை 1ஆம் சிங்கராஜர்
   3. திருத்தந்தை 11ஆம் சிங்கராஜர்
   4. திருத்தந்தை 4ம் சிங்கராஜர்
   5. திருத்தந்தை 7ஆம் கிரகோரி

27. பாவங்களுக்குரிய தண்டனையிலிருந்து முழுமையாக அல்லது அரைவாசி விடுதலை பெறுவதற்கு பணத்தைப் பயன்படுத்துவதை தூய வியாபாரம் என்று அழைத்தவர்
   1. ஏழாம் கென்றி  2. சுவிங்கிலி  3. எட்டாம் கென்றி
   4. கல்வின்  5. மாட்டின் லூதர்

28. சீர்திருத்த சபைகளின் இரண்டாவது பரம்பரையைச் சேர்ந்தவரும், சீர்திருத்த புரஸ்பிடேரியன் சபைகளின் ஸ்தாபகரும்
   1. ஏழாம் கென்றி  2. சுவிங்கிலி  3. எட்டாம் கென்றி
   4. கல்வின்  5. மாட்டின் லூதர்

29. கி.பி. 1098இல் மொலேஸ்மாவின் துறவியான றொபேர்ட்டினால் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபையும், பெனடிற் துறவறசபைக்குள்ளும், திருச்சபைக்குள்ளும் ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்திய சபையும்
   1. சிஸ்ரேசியன்  2. குளுனி  3. லூதரன்  4. வல்தேசியன்  5. ஆசீர்வாதப்பர்

30. இயேசுக்கிறிஸ்து தமது பிதாவுக்கு சரிசமமானவர் என்றும், பிதாவோடு ஒரே பொருளானவர் என்றும் அறிக்கை செய்த சங்கம்
   1. கொன்ந்தாந்திநோபிள்  2. எபேசு சங்கம்  3. ஜெருசலேம் சங்கம்
   4. நிசேயா சங்கம்  5. கல்சடோன் சங்கம்

31. பெரிய சாள்ஸ் அரசன் கல்வி நிலையை முன்னேற்றுவதற்காக தனது செயலாளருடைய தலைமைத்துவத்தின் கீழ் ஒரு அறிவாளிகள் குழுமத்தை உருவாக்கினார். அச்செயலாளர்
   1. நிக்கலஸ்  2. அல்குயின்  3. சிறில்  4. அத்தனாசியுஸ்  5. ஓடோ

32. பத்தாம் நூற்றாண்டில் திருச்சபையின் ஆன்மீகம் நலிவடைந்த போது கத்தோலிக்க திருச்சபை முதலாவது ஓட்டோ என்னும் ஜேர்மனிய இனத்தவரால் ஆட்சி செய்யப்படக் காரணமான திருத்தந்தை
   1. திருத்தந்தை 1ம் பத்திநாதர்
   2. திருத்தந்தை 12ம் பத்திநாதர்
   3. திருத்தந்தை 12ம் ஜோண்
   4. திருத்தந்தை 23ம் ஜோண்
   5. திருத்தந்தை 2ம் ஜோண் பவுல்

33. பூமியில் வாழ்கின்ற மனிதனின் பரிணாம வரலாற்றைப் பற்றிய முழுமையான தத்துவத்தை முன் வைத்துள்ள சிந்தனையாளரான அருட்பணி ரெயாட் டீ சார்டேன்
   1. அகுஸ்தினார் சபையைச் சேர்ந்தவராவார்
   2. அக்குவைனஸ் சபையைச் சேர்ந்தவராவார்
   3. டோமினிக்கன் சபையைச் சேர்ந்தவராவார்
   4. இயேசுசபையைச் சேர்ந்தவராவார்
   5. ஆசீர்வாதப்பர் சபையைச் சோந்தவராவார்

34. போர்த்துகேயர் காலத்தில் மகா ஓயாவின் வடக்குப் பகுதிகளில் பணிபுரிந்த துறவற சபையினர்
1. இயேசுசபையினர்
2. அகுஸ்தினார் சபையினர்
3. டோமினிக்கன் சபையினர்
4. பிரான்சிஸ்கன் சபையினர்
5. ஒரிற்றோரியன் சபையினர்

35. 1658 இல் இலங்கைக்கு இராணுவத்திற்கு பொறுப்பாகச் செயலாற்றுவதற்காக இலங்கைக்கு வந்தவர்
1. பெர்லின் எசவ் 2. தொன் யுவான் 3. ரொறேனோ
4. பேதுரு பெர்றாவோ 5. பிலிப் பல்தேயுஸ்

36. பல்வேறு இடங்களிலிருந்து யாத்திரிகர்களை வரவழைத்து கி.பி. 1870 யூலை மாதத்தில் மடுத்திருத்தலத்தில் விழாவினை ஆரம்பித்தவர்
1. யாக்கோமே கொண்சால்வெஸ் அடிகளார்
2. புனித யோசவ்வாஸ் அடிகள்
3. பெற்றக்கீனி அடிகள்
4. தொன்யுவான் அடிகள்
5. அருட்தந்தை கிறிஸ்தோபர் பொஞ்சீன் அடிகள்

37. ஒல்லாந்தர் காலத்தில் மாணவர்கள் பாடசாலையில் கல்வியைக் கற்க வேண்டிய காலமாகக் கணிக்கப்பட்டது
1. 8 - 15 2. 5 - 15 3. 6 - 16 4. 8 - 19 5. 4 - 16

38. ஆரம்பகாலங்களில் பொதுச்சங்கங்களை நடாத்தும் போது கூடுதலான அதிகாரம் இருந்தது.
1. திருச்சபையின் தலைமைப்பீடத்திற்கு
2. வத்திக்கான் பிரதிநிதிக்கு
3. திருச்சபையின் தலைவருக்கு
4. மறைமாவட்ட அதிகாரிக்கு
5. உரோமைப் பேரரசிற்கு

39. இலத்தீன் தந்தையர்களான கிளரி, ஜெரோம், அம்புறோஸ், அகஸ்டின் ஆகியோரை திருச்சபையின் பெரிய தந்தையர்கள் என உத்தியோக பூர்வமாக வெளியிட்டவர்
1. திருத்தந்தை எட்டாவது போனிபஸ்
2. திருத்தந்தை 3வது பத்திநாதர்
3. திருத்தந்தை ஏழாவது கிரகோரி
4. திருத்தந்தை பத்தாவது பயஸ்
5. திருத்தந்தை இரண்டாவது அருள் சின்னப்பர்

40. நிசேயா விசுவாசப்பிரமாணத்தை எழுதியவர்
1. புனித ஜெறோம் 2. புனித ஜஸ்டின் 3. புனித சிறில்
4. புனித அத்தனாசியார் 5. புனித அகஸ்டின்

41. தோனாத்தியப்பேதகத்திற்குப் பின்னர் மேற்கத்தேய திருச்சபையின் இறையியலுக்கு கடும் எச்சரிக்கையாக இருந்தது
1. மனிக்கேய பேதகம் 2. பெலாஜிய பேதகம் 3. ஆரிய பேதகம்
4. நெஸ்தோரிய பேதகம் 5. மசதோனிய பேதகம்

42. கிறிஸ்தவ நம்பிக்கையின் செய்தியாளர்களாகவும், மேற்குக் கலாச்சாரத்தின் பாதுகாப்பாளர்களாகவும், நாகரிக வாழ்க்கை முறைகளை அறிமுகப்படுத்தியவர்களாகவும் விளங்கியவர்கள்
1. பெனடிற் சபையின் துறவிகள்
2. குளுனி சபையின் துறவிகள்
3. இரவலர் சபைத் துறவிகள்
4. இயேசு சபையின் துறவிகள்
5. சித்ரேஷியன் சபையின் துறவிகள்

43. அப்போஸ்தலிக்கப்பணிகளில் முழுநேரப் பணியாளராக செயலாற்றுவதற்கு பெண்களுக்கென்று ஆரம்பிக்கப்பட்ட துறவற சபைகளில் முதலாவது சபையாக விளங்கும் அன்புக்கன்னியர் சபையை ஆரம்பித்தவர்
1. இக்னேசியஸ் லொயலா
2. பீட்டர் கனிசியஸ்
3. வின்சன் டி போல்
4. றொபேர்ட் பெலாமின்
5. சைமன் ஸ்டொக்

44. திருத்தந்தை 23ம் அருளப்பரால் வெளியிடப்பட்ட சுற்றுமடல்கள்
1. தொழிலாளர் சாசனம், அவனியில் அமைதி
2. அவனியில் அமைதி, மனித மாண்பு
3. சமூகச் சீரமைப்பு, அன்னையும் ஆசிரியையும்
4. தொழிலாளர் சாசனம், சமூகச் சீரமைப்பு
5. அன்னையும் ஆசிரியையும், அவனியில் அமைதி

45. ஸ்பெயினிலுள்ள பழமைவாய்ந்த பல்கலைக்கழகமும், கி.பி. 1218.இல் ஒன்பதாம் அல்போன்ஸ் அரசனால் ஆரம்பிக்கப்பட்டதுமான பல்கலைக்கழகம்
1. ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழகம்
2. கேம்பிரிஜ் பல்கலைக்கழகம்
3. பரிஸ் பல்கலைக்கழகம்
4. சலமன்கா பல்கலைக்கழகம்
5. பொலெஞ்ஞா பல்கலைக்கழகம்

46. கிறிஸ்து அரசர் பெருவிழா கத்தோலிக்க திருச்சபையில் கொண்டாடப்பட வேண்டுமெனப் பிரகடனம் செய்த திருத்தந்தை
1. திருத்தந்தை 23ம் அருளப்பர்
2. திருத்தந்தை 13ம் சிங்கராயர்
3. திருந்தந்தை 2ம் அருள் சின்னப்பர்
4. திருத்தந்தை 10ம் பத்திநாதர்
5. திருத்தந்தை 6ம் சின்னப்பர்

47. திருச்சபையின் வரலாற்றில் பாடற்திருப்பலி, துக்க பாடல் திருப்பலி உருவாக்கப்பட்டது
1. 16ம் நூற்றாண்டு
2. 11ம் நூற்றாண்டு
3. 4ம் நூற்றாண்டு
4. 19ம் நூற்றாண்டு
5. 20ம் நூற்றாண்டு

48. மத்திய யுகத்தில் கிறிஸ்தவ சிற்பக்கலையைப் பயன்படுத்தியிருப்பது
1. கட்டடக்கலையின் அபிவிருத்தியை முன்னிட்டு
2. கலாச்சார மதிப்பீடுகளின் ஊடாக இறைவனை வழிபடுவதற்காக
3. ஆலயங்கள், கட்டடங்களை அலங்கரிக்கும் முறையாக
4. சிற்பக்கலையை அனுபவரீதியாக அறிவதற்காக
5. ஆலயக்கட்டடங்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக

49. பிலிப்பல்தேயுஸ் அடிகளார் மூலம் நிறைவேற்றப்பட்ட சிறப்புவாய்ந்த பணி ஆவது
1. பங்கின் நிர்வாகத்தைத் திட்டமிடல்
2. கற்றகிஸ்ட் (மறையாசிரிகளை) பயிற்றுவித்தல்
3. மருத்துவப்பணிகளில் ஈடுபடல்
4. தோட்டப்பகுதிகளில் மறைபோதகப் பணியை விரிவடையச் செய்தல்
5. மென்னாகாரட்டா சட்டத்தை ஆக்கப் பங்களிப்புச் செய்தல்

50. மனித அபிவிருத்தி சிறந்த நிலை, மற்றும் சமூக நலன் கருதி செயற்பட அனுபவ வாயிலான கிறிஸ்தவ உயிரூட்டம் பெறுவது
1. கிறிஸ்தவ திருவழிபாட்டில் செயலுள்ள முறையில் கலந்து கொள்வதன் மூலம்
2. சமூக நலன்புரிச் சேவைகள் மூலம்
3. கிறிஸ்தவ செபவாழ்வின் மூலம்
4. அரசியல் துறையில் பங்குபற்றுவதன் மூலம்
5. நல்ல குடும்ப வாழ்க்கை வாழ்வதன் மூலம்